செய்தி வெளியீடு எண்:85 நாள்:04.02.2021

**<u>இன்று (4.2.2021), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், சென்னை, அண்ணா அரங்கத்தில், உலக புற்றுநோய் தினத்தையொட்டி அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் சங்கம் நடத்திய தமிழ்நாடு காவல்துறையினருக்கு புற்றுநோய் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை:–</u>**

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

உலக புற்றுநோய் தினத்தையொட்டி அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் சங்க விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நல்ல நிகழ்ச்சிக்கு வருகை புரிந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே!

வரவேற்புரை நிகழ்த்திய அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் சங்கத்தின் தமிழ்நாடு மாநில சபையின் தலைவர் மருத்துவர் அ. ராஜசேகர் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய இந்திய மருத்துவர் சங்கத்தின் தேசியத் தலைவர் மருத்துவர் ஜா.ஆ. ஜெயலால் அவர்களே!

அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர் சங்க துணைத் தலைவர் டாக்டர் சித்தேஷ் அவர்களே!

நன்றியுரை நவின்ற அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர் சங்கத்தின் சென்னை தலைமையிட கிளை பொருளாளர் மருத்துவர் அர.கண்ணன் அவர்களே!

அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர் சங்கத்தின் தமிழ்நாடு மாநில சபையின் செயலாளர் மருத்துவர் சே.கு. பாலமுருகன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஒருங்கிணைத்து சிறப்பு சேர்த்துக் கொண்டிருக்கும் மருத்துவர் மா. கனகவேல் அவர்களே!

மற்றும் இந்தச் சங்கத்தின் அனைத்து அங்கத்தினர்களே!

மருத்துவர்களே!

காவல் துறை உயரதிகாரிகளே காவலர்களே!

சிறப்பு அழைப்பாளர்களே!

பத்திரிகைத் துறை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 4–ஆம் நாள் உலக புற்று நோய் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால், புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர் சங்கம், காவல் துறையினருக்கென இந்தப் புற்றுநோய் விழிப்புணர்வு சிறப்பு நிகழ்வு ஏற்பாடு செய்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது.

இந்த அரங்கத்தில் நுழைந்தவுடன், உங்களையெல்லாம் பார்க்கும்போது உன்னதமான உயிர்காக்கும் மருத்துவ சேவை புரியும் நம் மருத்துவர்கள் எத்தனை சிறப்பு வாய்ந்தவர்கள் என்பதை எண்ணி உள்ளம் மகிழ்ந்தேன். இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கும் அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர் சங்கமானது 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை மருத்துவர்கள் அடங்கிய கூட்டமைப்பு என்பதையும், அறுவை சிகிச்சைத் துறையில் பலவிதமான அறிவியல் மற்றும் சர்வதேச சிகிச்சை நுட்பங்களை இக்கூட்டமைப்பு மருத்துவர்களுக்குப் பயிற்றுவித்து, உலக மக்களுக்கு நன்மை சேர்க்கும் உயர்ந்த நோக்கத்துடன் செயல்படுகின்றது என்பதையும் அறிந்து நான் பாராட்டுகின்றேன்.

இந்த நிகழ்ச்சியில்,

- காவல் துறையினர் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம்

- புற்றுநோய் மற்றும் ஆரம்ப கால அறிகுறிகள், புற்றுநோய் குறித்த தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மற்றும் சிகிச்சை வசதிகள் பற்றிய விளக்கக் கண்காட்சி
- புற்றுநோய் அறிகுறிகள், தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள் பற்றிய விளக்கக் கையேடு வழங்குதல்
- புற்றுநோயிலிருந்து மீண்டவர்களின் எண்ணப் பரிமாற்றம்
- சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகள்
- பலவிதமான புற்று நோய்கள் பற்றிய கலந்துரையாடல்

என பலவிதமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் அகில இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர் சங்கத்தின் நிர்வாகிகளையும், அதற்கு உறுதுணையாக இருந்து வரும் அனைவரையும் இந்த நேரத்தில் நான் மனதார பாராட்டுகிறேன்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது பழமொழி. ஆனால், இன்றைக்கு புதிய, புதிய நோய்கள் தோன்றிய வண்ணம் உள்ளன என்பது வருத்தத்திற்குரிய செய்தியாக இருந்தாலும், அவற்றையெல்லாம் முறியடிக்கும் வகையில் நாம் மருத்துவ துறையில் வளர்ச்சி கண்டு வருகிறோம் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். எத்தனை புதிய நோய்கள் வந்தாலும், அவற்றையெல்லாம் எதிர்கொண்டு, குணமாக்கி, மருத்துவர்களாக, செவிலியர்களாக, தூய்மைப் பணியாளர்களாக, நம்மிடையே நமக்காகப் பணியாற்றி வரும் அனைவருக்கும் என் உள்ளம் கனிந்த நல்வாழ்த்துகளைத் இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், குடிமக்கள் அனைவருக்கும் உயர்தர மருத்துவ சேவை கிடைக்கும் வகையில் மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவதனால்தான், இந்தியாவிலேயே தமிழ்நாடு மருத்துவ துறையில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது.

"நலமான மாநிலமே, வளமான மாநிலம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில், மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினைப் பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- அரசு மருத்துவமனைகளில் புற்று நோய்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் வகையில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 அரசு மருத்துவமனைகளில் Linear Accelerator என்ற உயர் தொழில்நுட்பக் கருவி நிறுவப்பட்டு வருகிறது.
- சென்னை அடையாறு புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அளவில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.
- 59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு புற்றுநோய் மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேன்மைமிகு மையம் ஏற்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
- அண்மையில் மறைந்த, சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் தலைவரும், உலக புகழ்பெற்ற புற்று நோய் நிபுணருமான மருத்துவர் வி.சாந்தா அவர்களின் மருத்துவ சேவையினைப் பாராட்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஔவையார் விருது வழங்கி சிறப்பித்துள்ளார்கள்.

- கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு 56 சி.டி.ஸ்கேன், 22 எம்.ஆர்.ஐ. ஸ்கேன், 18 கேத்லேப் மற்றும் 530 டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும்,

- மாண்புமிகு அம்மாவின் வழியில் மக்களைப் பற்றியே சிந்திப்பதனால்தான், சமீபத்தில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் சற்று தொலைவில் உள்ள இடங்களில், ஏழை, எளிய மக்களுக்காக அந்தப் பகுதியிலேயே மருத்துவ தேவைகளுக்காக, தமிழ்நாடு முழுவதும் 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகளை ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு அது செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.
- 2010–11இல் 1,539 ஆக இருந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை தற்போது 2,267 ஆக உயர்த்தப்பட்டுள்ளன.
- 32 ஆரம்ப சுகாதார நிலையங்களில், நவீன இணையவழி கண் பரிசோதனை மையங்கள், அனைத்து மருத்துவ கருவிகளுடன் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 2010–11இல் 3,889 கோடி ரூபாயாக இருந்த சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடு, மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் 4 மடங்கு உயர்த்தப்பட்டு 15 ஆயிரத்து 863 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம், மற்றும் மகளிருக்கான அம்மா மகளிர் முழு உடல் பரிசோதனை திட்டம், நடமாடும் மருத்துவமனை திட்டம், அம்மா மருந்தகம் போன்ற தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம், உயர்நிலை மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், 104 மருத்துவ சேவை வசதி, இரத்த வங்கிகள், விபத்து சேவை

மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகளை நிறுவுதல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

- 108 அவசர கால ஊர்தி சேவையின் கீழ், 2011–இல் 415–ஆக இருந்த ஆம்புலன்ஸ் வாகனங்கள் தற்போது 1,707 ஆக உயர்த்தப்பட்டுள்ளன.
- 11 அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படும் சிமாங்க் மையங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.
- தாய்–சேய் நலப் பிரிவுகள் ஒப்புயர்வு மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு பேறுகாலம் வரை 18,000 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுவது இந்தத் திட்டத்தின் வெற்றியை காட்டுகிறது.
- கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 16ல் இருந்து 15 ஆகவும், பேறுகாலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில், 2030–இல் அடைய வேண்டிய நீடித்த, நிலையான இலக்குகளை இப்போதே அடைந்து விட்டோம் என்பது ஒரு சரித்திர சாதனையாகும்.
- கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 30 படுக்கை வசதி, ஸ்கேன், போன்ற வசதிகளுடன் 166 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.
- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு 6 வருடங்களாக தொடர்ந்து தேசிய அளவில் மிகச் சிறந்த மாநில விருதை பெற்று வருகிறது. உடல் உறுப்பு தானத்தில் சிறந்த

மருத்துவமனைக்கான விருது, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய தர உறுதி திட்டத்தின் கீழ், சிறந்த செயல்பாடுகளுக்காக தமிழ்நாட்டில் உள்ள 26 அரசு மருத்துவமனைகள் மற்றும் 47 ஆரம்ப சுகாதார நிலையங்களும் தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசால் பாராட்டு சான்றிதழும் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளன.
- உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாது, மிகச் சிறந்த மனித வளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகின்ற காரணத்தினால், தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக இன்றைக்கு விளங்குகிறது.
- இன்றைக்கு தரமான மருத்துவ சிகிச்சை குறைந்த செலவில் பெறுவதற்காக, வெளி மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்கு வருகின்றனர். இதன் மூலம் தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ சுற்றுலா தலமாக விளங்குகிறது.

மருத்துவ கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவ கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு அம்மாவின் கொள்கையாகும்.

2011–ஆம் ஆண்டில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்ற வரை, 1,945 மருத்துவ இடங்கள் தான் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில், இதை 3,060 இடங்களாக உயர்த்தினார்கள். தற்போது இது 3,650 ஆக உயர்ந்துள்ளது. மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுடன் கூடிய மருத்துவமனைகளை உருவாக்கியதன் மூலமாக 1,650 புதிய இடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இனி வருங்காலங்களில் 5,300 நபர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ளது என்ற

மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இதை வரலாற்றுச் சாதனையாக நாம் பார்க்கின்றோம்.

அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவராகும் கனவினை மெய்ப்பிக்கும் வகையில் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் உள் ஒதுக்கீடாக 7.5 சதவீதம் வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு அரசுப் பள்ளிகளில் பயின்ற 41 விழுக்காடு மாணவர்களில் 6 மாணவர்கள் மட்டுமே நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவ இடங்கள் அவர்களுக்கு கிடைத்தது. ஆனால், 7.5 சதவீதம் வழங்கியதன் காரணமாக, வரலாற்று சாதனையாக, இந்தாண்டு 435 மருத்துவ மற்றும் பல் மருத்துவ இடங்கள் கிடைத்துள்ளன என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய கல்விச் செலவு முழுவதையும் ஏற்பதற்கு 16 கோடி ரூபாய் சுழல் நிதியை மாண்புமிகு அம்மாவின் அரசு ஏற்படுத்தியுள்ளது.

இன்று உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, குணமானவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இறப்பு சதவிகிதம் குறைவாகவும் உள்ளது. இதனால், தமிழ்நாட்டின் கொரோனா தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வெகுவாக பாராட்டியுள்ளார்கள். இதனை அனைத்து மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் மட்டும்தான் பரிசோதனைகள் அதிகரித்தபோதும், தொற்றாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 8,19,850, குணமடைந்தவர்களின் சதவீதம் 97.97 ஆகும். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் நோய் சிகிச்சை குறித்து நிலையான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

மருத்துவ துறையில் இதுபோன்று எண்ணற்ற சாதனைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவ துறையில் அளப்பரிய சாதனைகளை நிகழ்த்திக்

கொண்டிருக்கும் இந்த வேளையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எத்தனை, எத்தனை வசதி வாய்ப்புகளை நாம் பெற்றிருந்தாலும், நோய் வராமல் காத்துக் கொள்வதே சாலச் சிறந்தது.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

எனும் ஐயன் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சி, ஒழுக்கநெறியில் தவறாது நின்று, நோய் வருவதற்கு முன்பே நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டும் எனவும், திருமந்திரம் அருளிய திருமூலர் சொன்னது போன்று,

''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''

என்று உடலை காத்து நலமான, வளமான வாழ்க்கை வாழ அனைவரையும் கேட்டுக்கொண்டு, இந்த அருமையான நிகழ்ச்சியை நல்ல முறையில் இங்கே ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து, மேடையில் வீற்றிருக்கும் அனைவரும் அறுவை சிகிச்சை நிபுணர்கள். அவர்களுக்கு விருது வழங்குகிற பாக்கியத்தை இறைவன் எனக்குக் கொடுத்ததை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். ஏனென்றால், உயிரைக் காக்க வேண்டியவர்கள் மேடையில் வீற்றிருக்கிறார்கள். அவ்வாறு நம்முடைய உயிரைக் காக்கின்ற இறைவனாக மருத்துவர்களை நாம் ஒவ்வொருவரும் பார்க்கின்றோம். அவர்களை நேசிக்கின்றோம், புகழ்கின்றோம், அவர்களை பாராட்டுகிறோம். எத்தனையோ துறைகள் இருந்தாலும் இந்த மருத்துவ துறைக்குத்தான் தனிச் சிறப்பு இருக்கிறது. ஏனென்றால், இறைவனுக்குச் சமமாக மருத்துவர்களை பார்க்கின்றோம்.

இதற்கு உதராணமாக, ஒரு பதினைந்து இருபது நாட்களுக்கு முன்பு என்னுடைய நெருங்கிய நண்பர் மரியாதைக்குரிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.காமராஜ் அவர்கள் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஒரு சில நாட்களில் அவர் குணமடைந்து வீடு திரும்பினார். மீண்டும் காய்ச்சல் வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அப்போது மருத்துவர்கள் மிக ஆபத்தான நிலையில் உள்ளார், அவரை காப்பாற்றுவது மிக, மிகக் கடினம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் மிக, மிக வேதனைப்பட்டேன். ஏனென்றால், ஒரு வாரத்திற்கு முன்புதான் அவரோடு தொலைபேசி வாயிலாக பேசிக் கொண்டிருந்தேன். அவ்வாறு மகிழ்ச்சிகரமாக பேசிக் கொண்டிருந்த ஒருவர் திடீரென்று தொற்று நோயால் பாதிக்கப்பட்டு அவர் உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டபோது மிக, மிக வேதனைப்பட்டேன். அப்போது, எம்.ஜி.எம். மருத்துவமனை மருத்துவ குழுவினருடன் நானும், துணை முதலமைச்சர் அவர்களும் பேசிக் கொண்டிருந்தபோது அவர்கள், எங்களிடத்தில் ஒன்றுமில்லை, இறைவனிடத்தில்தான் உள்ளது, எங்களுடைய முழு திறமையையும் நாங்கள் பயன்படுத்தி அவரை குணமடையச் செய்ய பாடுபடுவோம் என்று சொன்னார்கள். இருந்தாலும், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார், சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நல்ல சிகிச்சை அளிக்கப்பட்டு இன்றைக்கு வீடு திரும்புகிற காட்சியை நாம் பார்க்கும்போது, உண்மையிலேயே மருத்துவர்களை இறைவனுக்குச் சமமாக நான் போற்றுகிறேன்.

இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் என்பது உண்மையிலேயே ஒரு ஆபத்தான கொடிய நோய். நம்முடைய காவலர்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பலரது உயிரைக் குடித்துவிட்டது. இது யாரிடம் இருக்கிறதென்பதை கண்டு பிடிக்க முடியாத ஒரு விசித்திரமான நோயாக இருக்கிறது. அனைவரும் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். விளையாட்டுத்தனமாக இருந்து விட்டால் அந்த நோய் எவ்வளவு ஆபத்தானது என்பதை நேரடியாகப் பார்த்து உணர்ந்தேன். காணொலிக் காட்சி மூலமாக அவருடைய மருத்துவ சிகிச்சையைப் பார்க்கின்றபோது எனக்கு மிகப்பெரிய அச்சத்தை உண்டாக்கியது. எனவே, ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 24 மணிநேரமும் பணியில் இருப்பவர்கள் காவலர்களும், மருத்துவர்களும்தான். இந்நோய் எளிதாக தொற்றிக்கொள்ளுமென்றாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல், தன் உயிரையும், தன் குடும்பத்தாரையும் பொருட்படுத்தாமல் எந்தவித அச்சமும்

இல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து, குணமடையச் செய்து, அவர்கள் வீடு திரும்புகிற காட்சியைப் பார்க்கின்றபோது, இந்த நாட்டிற்காக தன்னையே அர்ப்பணித்து அரும்பணியாற்றிய மருத்துவர்களை எவ்வளவு பாராட்டினாலும் பொருந்தும். எனவே, அவர்களை மனதார, உளமாற பாராட்டி விடைபெறுகிறேன்

நன்றி!

வணக்கம்!

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**